Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com

தினசரி காலை நாளிதழ்

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Tamilnadu Association For The Rights of All Types of Differently Abled and Caregivers - TARATDAC
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | திங்கள்கிழமை, ஜூன் 24, 2024 | இதழ் 72

## 3வது ஆட்சிக் காலத்தில் மும்மடங்கு வேகத்தில் பணியாற்றுவோம் சாமானிய மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவோம்: மோடி உறுதி

சென்னை, 24 ஜூன் 2024: 3வது முறை ஆட்சிக் காலத்தில் மும்மடங்கு வேகத்தில் பணியாற்றுவோம் என பிரதமர் மோடி உறுதியளித்தார்.

சாமானிய மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவோம் என்றும் அவர் கூறினார்.

18வது நாடாளுமன்ற முதல் கூட்டத்தொடர் இன்று துவங்கியது.

முன்னதாக நாடாளுமன்ற வளாகத்தில் பிரதமர் மோடி செய்தியாளர்களிடம் கூறியதாவது: “நாடாளுமன்ற ஜனநாயகத்தில், இது ஒரு புகழ்மிக்க நாள். ஆம், சுதந்திரத்துக்குப் பிறகு முதல் முறையாக, நமது சொந்த புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில், பதவியேற்பு விழா நடக்கிறது. முன்னதாக, பழைய நாடாளுமன்ற கட்டடத்தில் பதவியேற்பு விழாக்கள் நடந்தன. இந்த குறிப்பிடத்தக்க நாளில், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து எம்.பி.க்களையும் நான் மனதார வரவேற்கிறேன். அவர்களுக்கு எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டுக்கு சேவை செய்யவும், 140 கோடி மக்களின் நம்பிக்கையை காப்பாற்றவும் எம்.பி.க்கள் பாடுபட வேண்டும்.



18வது நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத் தொடர் இன்று தொடங்குகிறது. நாடாளுமன்றம் கூட்டம் சாமானிய மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும். புதிய உத்வேகம், புதிய உற்சாகத்துடன் பணிகளை துவங்க வேண்டிய பணி நம் முன் இருக்கிறது. 2047ல் வளர்ச்சியடைந்த பாரதம் என்ற கனவை நிறைவேற்றும் வகையில் செயல்படுவோம்.

உலகின் மிகப்பெரிய தேர்தல் மிகவும் பிரம்மாண்டமாகவும், கோலாகலமாகவும் நடத்தப்பட்டது. சுதந்திரத்துக்குப் பிறகு 2வது முறையாக, ஒரு கட்சிக்கு 3வது முறையாக சேவை செய்யும் வாய்ப்பை நாட்டு மக்கள் வழங்கியிருப்பதால் நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தல் மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. 60 ஆண்டுகளுக்கு பிறகு எங்களின் நோக்கம், செயல்பாட்டுக்காக மக்கள் 3வது முறையாக எங்களுக்கு வாய்ப்பளித்துள்ளனர். இதன்மூலம் எங்களின் பொறுப்பு மும்மடங்கு அதிகரித்துள்ளது. எனவே, 3வது பதவிக்காலத்தில், நாங்கள் 3 மடங்கு கடினமாக உழைப்போம் என்று நாட்டு மக்களுக்கு உறுதியளிக்கிறேன். கடந்த 10 ஆண்டுகளில், நாங்கள் வழக்கமான பாரம்பரியத்தை கடைபிடிக்க முயற்சித்தோம். ஏனென்றால், நாட்டின் வளர்ச்சிக்கு நிலையான ஆட்சி முக்கியம். ஆட்சியை வழிநடத்த பெரும்பான்மை அவசியம். நாட்டை வழிநடத்த ஒருமித்த கருத்து மிக முக்கியமானது என்று நாங்கள் நம்புகிறோம். எனவே, 140 கோடி மக்களின் ஆசைகளையும் லட்சியங்களையும் நிறைவேற்றுவதற்கு அனைவரையும் அரவணைத்து செல்ல முயற்சிப்போம். கடமை, செயல்பாடு மற்றும் கருணையுடன் எமது ஆட்சி நடைபெறும். 2 முறை அரசை வழிநடத்திய அனுபவம் எங்களுக்கு உள்ளது.

நாளை ஜூன் 25. இந்த நாள் இந்திய ஜனநாயகத்தின் விழுந்த கறையின் 50 ஆண்டுகளைக் குறிக்கிறது. இந்தியாவில் எமெர்ஜென்சி அறிவிக்கப்பட்ட 50வது வருடம். இந்த நாளில், இந்திய அரசியலமைப்பு சட்டத்தை முற்றிலுமாக நிராகரித்தது, அரசியலமைப்பின் ஒவ்வொரு பகுதியும் துண்டு துண்டாக கிழிக்கப்பட்டது, நாடு சிறைச்சாலையாக மாற்றப்பட்டது. ஜனநாயகம் முற்றிலும் நசுக்கப்பட்டது. அரசியலமைப்பை பாதுகாக்க நினைக்கும் இந்தியாவின் புதிய தலைமுறை இந்த நாளை ஒருபோதும் மறக்காது. 50 ஆண்டுகளுக்கு முன்பு செய்த இதுபோன்ற செயலை மீண்டும் இந்தியாவில் யாரும் செய்யத் துணிய மாட்டார்கள்.

நாட்டு மக்கள் எதிர்க்கட்சிகளிடம் இருந்து நல்ல நடவடிக்கைகளை எதிர்பார்க்கின்றனர். ஜனநாயகத்தின் மாண்பையும், நாட்டின் சாமானிய குடிமக்களின் எதிர்பார்ப்புகளையும் எதிர்க்கட்சிகள் நிறைவேற்றும் என நம்புகிறேன். நாடகங்களையோ, இடையூர்களையோ விரும்பவில்லை. மக்களுக்கு கோஷங்கள் தேவையில்லை, வாழ்வாதாரம் தேவை. நாட்டுக்கு ஒரு நல்ல எதிர்க்கட்சி, பொறுப்புள்ள எதிர்க்கட்சி தேவை. சாமானியர்களின் இந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற எம்.பி.க்கள் முயற்சிப்பார்கள் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. 18வது நாடாளுமன்றம் இந்திய ஜனநாயகத்திற்கு அதிர்ஷ்டத்தை கொண்டு வரும். நாட்டில் இருந்து வறுமையை முற்றிலும் ஒழிக்க உறுதி ஏற்போம். இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

## தமிழகம் முழுவதும் இன்று அ.தி.மு.க. கண்டன ஆர்ப்பாட்டம் கள்ளச்சாராய சாவுக்கு தி.மு.க. அரசே பொறுப்பு: எடப்பாடி குற்றச்சாட்டு கள்ளக்குறிச்சி ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

சென்னை, 24 ஜூன் 2024: கள்ளச்சாராய விற்பனையை தடுக்க தவறிய தி.மு.க. அரசை கண்டித்தும், உயிரிழந்த சம்பவத்திற்கு பொறுப்பேற்று ஸ்டாலின் பதவி விலக கோரியும் தமிழகம் முழுவதும் இன்று அண்ணா தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

விஷச் சாராய சாவு ஏற்பட்ட கள்ளக்குறிச்சியில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் எடப்பாடி பழனிசாமி கலந்து கொண்டார்.

கள்ளச்சாராய சாவு 59 ஆக உயர்ந்துள்ளது. இதற்கு தி.மு.க. அரசே பொறுப்பு. ஸ்டாலின் ராஜினாமா செய்ய வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தி பேசினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கறுப்பு சட்டையுடன் எடப்பாடி கலந்து கொண்டார். இந்த ஆர்ப்பாட்டத்தில் அண்ணா தி.மு.க.வினர் கருப்பு சட்டை அணிந்து ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டனர்.

இந்தஆர்ப்பாட்டத்திற்கு வந்திருந்தவர்களை மாவட்ட செயலாளர் இரா.குமரகுரு வரவேற்று பேசினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி பங்கேற்று கண்டன உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

உயர் அதிகாரிகளுடன் பலமுறை கூட்டம் நடத்திய முதல்வர் ஸ்டாலின் கள்ளச்சாராயத்தை தடுக்க தவறிவிட்டார். ஏழைகளை பற்றி அரசுக்கு கவலையில்லை. நகரின் மையப்பகுதியில் அரசின் ஆதரவு இல்லாமல் கள்ளச்சாராயம் விற்பனை செய்ய முடியாது.

கள்ளச்சாராயம் குடித்து 58 பேர் உயிரிழந்த சம்பவம் குறித்து சி.பி.ஐ., விசாரணை நடத்த வேண்டும். 58 மரணங்களுக்கும் பொறுப்பு தமிழக அரசு தான். காற்றை எப்படி தடை செய்ய முடியாதோ, அதுபோல மக்களின் உணர்வுகளை தடை செய்ய முடியாது. மக்களுக்கு நீதி கேட்பதில் என்ன தவறு? போராட்டத்தை முடக்க முயன்றாலும், அஞ்ச மாட்டோம். மக்கள் கொந்தளித்து போய் இருக்கிறார்கள். இதற்கு பதில் சொல்லி ஆக வேண்டும். திமுக ஆட்சியில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளது.

அதிகாரத்தை வைத்துக்கொண்டு தி.மு.க.,வினர் அதிகாரிகளை ஆட்டிப்படைக்கிறார்கள். அ.தி.மு.க.,வின் ஆர்ப்பாட்டத்திற்கு மேடை அமைக்கக்கூடாது என இடையூறு செய்தார்கள். தற்காலிக மேடையில் இப்போது நிற்கிறேன். மாவட்ட கலெக்டர் பொய் கூறியதால், கள்ளச்சாராயம் குடித்தவர் பலர் சிகிச்சைக்கு வராமல் உயிரிழந்தனர். தமிழகத்தில் கள்ளச்சாராயம் ஆறாய் ஓடுகிறது.

கள்ளக்குறிச்சி மாவட்ட கலெக்டர் அலுவலகம், போலீஸ் சூப்பிரண்டு அலுவலகம், நீதிமன்ற வளாகம் என நகரின் மையப் பகுதியில் கள்ள சாராய விற்பனை தங்கு தடையின்றி நடந்துள்ளது. இந்த ஆட்சி எப்படிப்பட்ட ஆட்சி என்று பாருங்கள். ஆளும் கட்சி ஆதரவு இல்லாமல் இது நடக்காது. நிர்வாக திறமையற்ற முதலமைச்சர் நாட்டை ஆளுகிறார். அப்படித்தான் இருக்கும்.

இந்த அரசு அடக்குமுறையை கையாள்கிறது. மக்களுக்கு நீதி கிடைக்காது. அப்பாவி மக்களின் உயிர் பறிபோய் இருக்கிறது. அரசு அமைத்துள்ள சிபிசிஐடி விசாரணை, ஆணையம் அமைப்பால் நீதி கிடைக்காது. எனவே தான் சிபிஐ விசாரணை கேட்கிறோம். அப்போது தான் நீதி கிடைக்கும்.

மக்களுக்கு குரல் கொடுக்கும் இயக்கம் அண்ணா தி.மு.க. எந்த தியாகத்துக்கும் அண்ணா தி.மு.க. தயார். கள்ளச்சாராயம் குடித்து 58 பேர் பலியாகி இருக்கிறார்கள். இதற்கு போராட்டம் நடத்தினால் எங்களை ஒடுக்குவார்களா? இதற்கெல்லாம் அஞ்சமாட்டோம்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி பேசினார்.



அவர் பேசும்போது கள்ளச்சாராயம் ஒழிப்பு பற்றி முதலமைச்சர் ஸ்டாலின் பேசியது, கள்ளச்சாராய மரணத்திற்கு அரசே பொறுப்பு என பெண்கள் குற்றஞ்சாட்டியது போன்ற வீடியோ காட்சிகள் திரையிடப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் மோகன், முன்னாள் எம்.பி. காமராஜ், முன்னாள் எம்.எல்.ஏ.,க்கள் அழகுவேல்பாபு, பிரபு, கள்ளக்குறிச்சி ஒன்றிய செயலாளர்கள் ராஜசேகர், தேவேந்திரன், சின்னசேலம் ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன், அய்யம்பெருமாள், தியாகதுருகம் ஒன்றிய செயலாளர்கள் அய்யப்பா, கிருஷ்ணமூர்த்தி, மற்றும் நகர செயலாளர் பாபு, ஜெயலலிதா பேரவை செயலாளர் ஞானவேல் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கிளை கழக நிர்வாகிகள், மகளிரணியினர் கலந்து கொண்டனர்.





PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி

திங்கள்கிழமை,
ஜூன் 24, 2024

# மக்களவை தொடங்கியது: எம்.பி.யாக மோடி பதவியேற்றார் 'நீட்' எதிர்ப்பு கோஷம் எழுப்பிய எதிர்க்கட்சிகள்



சென்னை, 24 ஜூன் 2024: பிரதமர் நரேந்திர மோடிக்கு நாடாளுமன்ற இடைக்கால சபாநாயகர் பர்த்ருஹரி மஹதாப் எம்.பி.யாக பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

புதிய எம்.பி.க்கள் பதவி ஏற்கவும், சபாநாயகர், துணை சபாநாயகரை தேர்வு செய்யவும் நாடாளுமன்றத்தின் 18வது மக்களவையின் முதல் கூட்டத்தொடர் காலை 11 மணிக்கு தொடங்கியது. இன்றும், நாளையும் முதல் 2 நாட்கள் புதிய எம்.பி.க்கள் பதவி ஏற்க உள்ளனர்.

முன்னதாக ஜனாதிபதி மாளிகையில் இடைக்கால சபாநாயகராக பா.ஜ.க. எம்.பி. பர்த்ருஹரி மஹதாப் பதவி ஏற்றுக்கொண்டார். அவருக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு பதவி பிரமாணமும், ரகசிய காப்பு உறுதிமொழியும் செய்து வைத்தார்.

பர்த்ருஹரி மஹதாப் சபாநாயகர் இருக்கையில் அமர்ந்து இன்றைய கூட்டத்தை தொடங்கினார். முதலில் மறைந்த எம்.பி.க்களுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனையடுத்து ஆளும் கட்சி தலைவர் என்ற முறையில் எம்.பி.யாக பதவி ஏற்க பிரதமர் மோடிக்கு தற்காலிக சபாநாயகர் பர்த்ருஹரி மஹதாப் அழைப்பு விடுத்தார். அதை ஏற்று முதல் நபராக பிரதமர் மோடி எம்.பி.யாக பதவி ஏற்றார்.

இதைத் தொடர்ந்து இடைக்கால சபாநாயகருக்கு உதவுவதற்கு 5 எம்.பி.க்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டது. அந்த குழுவில் கேரளாவை சேர்ந்த காங்கிரஸ் மூத்த எம்.பி. கொடிகுன்னில் சுரேஷ், தி.மு.க. எம்.பி. டி.ஆர்.பாலு, திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. சுதீப் பந்தோபாத்யாய, பா.ஜ.க.வை சேர்ந்த ராதாமோகன் சிங், பகன்சிங் குலஸ்தே ஆகிய 5 பேர் நியமிக்கப்பட்டு இருந்தனர்.

நாடாளுமன்றத்தில் உள்ள 543 எம்.பி.க்களுக்கும் இடைக்கால சபாநாயகரால் மட்டுமே பதவி பிரமாணம் செய்து வைக்க இயலாது என்பதால் அவருக்கு உதவ இந்த 5 எம்.பி.க்கள் குழு அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் இந்தியா கூட்டணி கட்சிகளை சேர்ந்த 3 எம்.பி.க்கள் அந்த குழுவில் இடம் பெற மறுத்துவிட்டனர். இதையடுத்து இடைக்கால சபாநாயகர் பர்த்ருஹரி மஹதாப்பும், பா.ஜ.க. எம்.பி.க்கள் இருவரும் புதிய எம்.பி.க்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைக்கும் நிகழ்ச்சியை மேற்கொண்டுள்ளனர்.

இதனைதொடர்ந்து அமித்ஷா, நிதின்கட்காரி உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள் பதவியேற்றனர். அதன் பிறகு மாநிலங்களின் ஆங்கில எழுத்து வரிசை அடிப்படையில் அனைத்து மாநிலங்களைச் சோ□ந்த புதிய எம்.பி.க்களும் வரிசையாக பதவியேற்கின்றனர். அந்தவகையில் ஆந்திரா, அசாம், அருணாசலபிரதேசம் என இன்று மொத்தம் 280 உறுப்பினர்கள் பதவியேற்றுக் கொள்கின்றனர்.

மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவியேற்க மேடை ஏறிய போது, எதிர்க்கட்சி எம்.பி.க்கள் சிலர் நீட் தேர்வு முறைகேடுக்கு எதிராக குரல் எழுப்பியதால் சலசலப்பு ஏற்பட்டது. எதிர்க்கட்சிகளின் கோஷங்களுக்கு மத்தியில் மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் எம்.பி.யாக பதவியேற்றுக் கொண்டார்.

நாளை தமிழகத்தை சேர்ந்த எம்.பி.க்கள் உட்பட 263 உறுப்பினர்கள் பதவியேற்றுக் கொள்கின்றனர். இதைத் தொடர்ந்து 26ம் தேதி சபாநாயகர் தேர்தல் நடைபெறும். 27ம் தேதி மாநிலங்களவை கூட்டத்தொடர் தொடங்கவுள்ள நிலையில், அன்றைய தினம் இரு அவைகளின் கூட்டு கூட்டத்தில் ஜனாதிபதி திரவுபதி முர்மு உரையாற்ற உள்ளார். ■

# இலங்கை கடற்படை கைது செய்துள்ள 37 மீனவர்களை விடுவிக்க இலங்கை அரசை வலியுறுத்துங்கள் மத்திய அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்



சென்னை, 24 ஜூன் 2024: இலங்கை அரசால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 37 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவாக விடுவித்திட இலங்கை அரசை வலியுறுத்திட வேண்டுமென்று கோரி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருக்கு இன்று கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், தனது முந்தைய கடிதத்தில் சுட்டிக் காட்டியது போன்று மீனவர்களை கைது செய்தல் மற்றும் அச்சுறுத்தல் சம்பவங்கள் தொடர்வதால் அவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அச்சமுதாயத்தினரிடையே மிகுந்த அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ள முதலமைச்சர், கடந்த 22.6.2024 அன்று, ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தைச் சேர்ந்த 22 மீனவர்கள், மூன்று இயந்திரப் படகுகளுடன் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளதாகச் தெரிவித்துள்ளார்.

எனவே, இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட மீனவர்களையும், அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ள முதலமைச்சர், ஏற்கெனவே விடுவிக்கப்பட்ட படகுகளை இலங்கையில் இருந்து கொண்டு வருவதற்கு மீட்புப் படகுகள் மற்றும் பணியாளர்களுக்கு இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை என்றும் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று, இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை சந்தித்து, அவர்களுக்கு ஆறுதலும் அடிப்படைத் தேவைகளையும் வழங்கிட அனுமதி தர வேண்டுமென தமிழ்நாட்டைச் சேர்ந்த பல்வேறு மீனவர் சங்கங்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலிக்க வேண்டுமென்றும் முதலமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மீனவர்களின் வாழ்வை சீர்குலைக்கும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண உடனடியாக உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், இதற்காக ஏற்கெனவே அமைக்கப்பட்ட கூட்டுப் பணிக்குழுவினை மீண்டும் புதுப்பிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ள முதலமைச்சர்,

இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண இலங்கை அதிகாரிகளிடம் எடுத்துரைத்திட உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# தளபதி விஜய் நடிக்கும் 'கோட்' படத்திற்காக மறைந்த பாடகி பவதாரிணியின் குரலுக்கு செயற்கை தொழில்நுட்பத்தின் மூலம் உயிரூட்டியுள்ள கிருஷ்ண சேத்தனின் 'டைம்லெஸ் வாய்சஸ்' ஸ்டார்ட் அப் நிறுவனம்



சென்னை, 24 ஜூன் 2024: ஏஜிஎஸ் என்டர்டெயின்மென்ட் தயாரிப்பில் தளபதி விஜய் நடிக்கும் 'கோட்' படத்தில் இடம்பெறும் 'சின்ன சின்ன கண்கள்' பாடல் சமீபத்தில் வெளியிடப்பட்டு பெரும் வரவேற்பு பெற்றது. மறைந்த பாடகி பவதாரிணி இப்பாடலை பாடியிருந்தது ரசிகர்களை இன்ப அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

ஆஸ்கர் நாயகன் ஏ ஆர் ரஹ்மான் உடன் நீண்ட காலமாக பணிபுரியும் இசை தயாரிப்பாளரும், இசைக்கோர்வை பொறியாளருமான கிருஷ்ண சேத்தனின் ஸ்டார்ட் அப் நிறுவனமான டைம்லெஸ் வாய்சஸ் வழங்கும் அதிநவீன செயற்கை நுண்ணறிவு (ஏ ஐ) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பவதாரிணியின் குரலை மீண்டும் உயிர்ப்பித்துள்ளார் அவரது சகோதரரும் இசையமைப்பாளருமான யுவன் ஷங்கர் ராஜா.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் சிறப்புத் தோற்றத்தில் நடித்த 'லால் சலாம்' திரைப்படத்தில் மறைந்த பாடகர்களான சாகுல் ஹமீது மற்றும் பம்பா பாக்யா ஆகியோரின் குரல்களை செயற்கை தொழில்நுட்பத்தின் மூலம் பயன்படுத்தி 'திமிரி எழுடா' என்ற உத்வேக□மூட்டும் பாடலை கிருஷ்ண சேத்தன் உடன் இணைந்து ரஹ்மான் உருவாக்கி இருந்தார். இந்த பாடலைக் கேட்ட யுவன் ஷங்கர் ராஜா, கோட் திரைப்படத்தில் இடம்பெறும் குடும்ப பாடலான 'சின்ன சின்ன கண்கள்' பாடலுக்காக பவதாரிணியின் குரலை பயன்படுத்த விரும்பி கிருஷ்ண சேத்தனை அணுகியுள்ளார்.

இந்த வாய்ப்பு கிடைத்ததற்காக பெரிதும் மகிழ்ந்த கிருஷ்ண சேத்தன், பவதாரிணியின் குரல் மாதிரிகளை யுவன் ஷங்கர் ராஜா அலுவலகத்தில் இருந்து பெற்று, மூன்று தினங்கள் தனது குழுவினருடன் உழைத்து செயற்கை தொழில்நுட்பத்தின் உதவியுடன் 'சின்ன சின்ன கண்கள்' பாடலுக்கு அதை பயன்படுத்தியுள்ளார்.

இது குறித்து பேசிய கிருஷ்ண சேத்தன், "பவதாரிணி அவர்களின் குரல் மிகவும் விசேஷமானது, தனித்தன்மை மிக்கது. அதை மீண்டும் உயிர்ப்பிக்கும் வாய்ப்பை அளித்த யுவன் ஷங்கர் ராஜா அவர்களுக்கு மனமார்ந்த நன்றி. இந்த பாடலைக் கேட்டு யுவன் ஷங்கர் ராஜா அவர்களும் இயக்குநர் வெங்கட் பிரபு அவர்களும் மிகுந்த மகிழ்ச்சி தெரிவித்தனர். இசைஞானி இளையராஜா அவர்களையும் சந்தித்து வாழ்த்து பெற்றேன்," என்று கூறினார்.

தற்போது ஷங்கர் இயக்கத்தில் உலகநாயகன் கமல் ஹாசன் நடிக்கும் 'இந்தியன் 2' திரைப்படத்திற்காக மறைந்த நடிகர்கள் விவேக் மற்றும் மனோபாலா ஆகியோரின் குரல்களை பயன்படுத்தும் பணியில் கிருஷ்ண சேத்தன் மற்றும் அவரது டைம்லெஸ் வாய்சஸ் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

பல்வேறு விருதுகளை வென்றுள்ள இசை தயாரிப்பாளரும், இசைக்கோர்வை பொறியாளருமான கிருஷ்ண சேத்தன் மூன்றாம் தலைமுறை இசைக்கலைஞர் மற்றும் முதல் தலைமுறை தொழில்முனைவோர் என்பது குறிப்பிடத்தக்கது. ஏ.ஆர்.ரஹ்மானின் இசைப் பயணத்தில் 'ரங் தே பசந்தி'யில் இணைந்து இரண்டு தசாப்தங்களாக ஒரு முக்கிய அங்கமாக இருந்து வருகிறார். இசைக்கலைஞராக குறிப்பிடத்தக்க பங்களிப்பு வழங்கியுள்ளதோடு, பிட்ச் இன்னோவேஷன்ஸ் எனும் நிறுவனத்தையும் கிருஷ்ண சேத்தன் தொடங்கி நடத்தி வருகிறார். இந்த முன்னோடி இசை மென்பொருள் நிறுவனம் அதன் புதுமையான தயாரிப்புகளுக்காக பல சர்வதேச பாராட்டுகளைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

டைம்லெஸ் வாய்சஸ் குறித்து கிருஷ்ண சேத்தன் கூறுகையில், "பாடகர்கள் மற்றும் நடிகர்களின் குரலைப் பாதுகாத்து செயற்கை நுண்ணறிவின் உதவியுடன் தேவைக்கேற்ப அதை சரியான முறையில் பயன்படுத்துவதே டைம்லெஸ் வாய்சஸின் நோக்கமாகும். ரஹ்மான் சாரிடம் இந்த யோசனையை நாங்கள் முன்வைத்த போது அவர் அதை வரவேற்றார். இதைத் தொடர்ந்து 'திமிரி எழுடா' பாடலுக்கு பம்பா பாக்யா மற்றும் ஷாஹுல் ஹமீதின் குடும்பத்தினரிடம் அனுமதி வாங்கி அவர்களது குரலை பயன்படுத்தினோம். இந்த பாடலுக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது," என்றார்.

கிருஷ்ண சேத்தன் மேலும் கூறுகையில்: "குரல்களை செயற்கை தொழில்நுட்பம் மூலம் பிரதியெடுத்து நாங்கள் பயன்படுத்துகிறோம். இதன் மூலம், பிரபல பாடகர்கள் முதல் இளம் பாடகர்கள் வரை பயனடைய முடியும். பாடகர்கள் தங்கள் குரலை என்றென்றும் பாதுகாக்க முடியும். உலகெங்கும் உள்ள இசை நிறுவனங்கள் மற்றும் இசையமைப்பாளர்களை அவர்கள் எளிதில் அணுக முடியும். பிரபல நடிகர்கள் மிகவும் சுலபமாக பல மொழிகளில் டப்பிங் பேச முடியும்," என்றார். "கலைஞர்களுக்கு முன்னுரிமை" என்ற அணுகுமுறையுடன், கலைஞர்களின் உரிமைகளை பாதுகாப்பதே டைம்லெஸ் வாய்சஸின் நோக்கமாகும். "கலைஞர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதன் மூலமும் அவர்களின் தேவைகளை ஆதரிப்பதன் மூலமும் நாங்கள் வளர விரும்புகிறோம்," என்று கிருஷ்ண சேத்தன் தெரிவித்தார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# ஜோயாலுக்காஸின் புத்தம் புதிய ஷோரூம் உடன் அண்ணாநகர் கொண்டாடுகிறது




சென்னை, 24 ஜூன் 2024: உலகின் முன்னணி ஜுவல்லரி நிறுவனமான ஜோயாலுக்காஸ் தன்னுடைய பிரம்மாண்டமான ஷோரூம் திறப்பு விழாவை அறிவித்துள்ளது. வரும் 22 ஜூன் 2024 அன்று ஜோயாலுக்காஸ் சென்னையில் அற்புதமான ஒரு ஜுவல்லரி அனுபவத்தை அண்ணாநகர் வாடிக்கையாளர்களுக்கு சமர்ப்பிக்கிறது. இந்த திறப்பு விழாவை முன்னிட்டு ஜோயாலுக்காஸ் துவக்க விழா சலுகையாக தங்கம், வைரம், வெள்ளி நகைகள் ஆகியவற்றுக்கு செய்கூலி மற்றும் சேதாரத்தில் 50 சதவீத தள்ளுபடி அளிக்கிறது, இச்சலுகை ஜூலை 14, 2024 வரை கிடைக்கிறது.

அண்ணாநகர் ஷோரூம் கலைநயத்துடன் வடிவமைக்கப்பட்ட ஆடம்பரமான ஷோரூமாக திகழ்கிறது. மிகச் சிறந்த வாடிக்கையாளர் சேவையுடன் ஒரு மில்லியன் டிசைன்களை கொண்ட ஜுவல்லரி சாம்ராஜ்யமாக விளங்குகிறது. மேலும் இந்த ஷோரூம் தலைசிறந்த வசதிகளுடன் வேறெங்கும் கிடைக்காத ஜுவல்லரி ஷாப்பிங் அனுபவத்தை உறுதி செய்கிறது. தங்கம் வைரம் வெள்ளி பிரஷ்யஸ் ஜுவல்லரி என்று ஒவ்வொரு வகையிலும் அமைந்துள்ள ஆபரணங்கள் மிகுந்த தரத்துடன், கலை வேலைப்பாட்டுடன், மிக நுணுக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ''எங்கள் அண்ணாநகர் ஷோரூம் திறப்புவிழாவை அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி. அதே நேரம் எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த ஷாப்பிங் அனுபவத்தையும் இத்துடன் நாங்கள் சமர்ப்பிக்கிறோம். இந்த உலகத்தரம் வாய்ந்த ஷோருமுடன் தரத்திற்கான எங்கள் அர்ப்பணிப்பு மற்றும் வாடிக்கையாளர் திருப்திக்கான எங்கள் முயற்சி அனைத்து அம்சங்களிலும் எதிரொலிப்பது உறுதி. இந்த திறப்புவிழாவுடன் எங்கள் சிறப்பு துவக்க விழா சலுகையை பெற்றிட அனைவரையும் வரவேற்கிறோம்," என்று ஜோயாலுக்காஸ் ஷோரூமின் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைவர் திரு ஜோய் ஆலுக்காஸ் அவர்கள் தெரிவித்தார்.

அண்ணாநகர் ஷோருமின் இந்த பிரம்மாண்ட திறப்பு விழாவில் கலந்துகொள்ளுங்கள். ஏன் உலகின் ஃபேவரிட் ஜுவல்லரியாக ஜோயாலுக்காஸ் திகழ்கிறது என்பதையும் கண்டறியுங்கள். இந்த புதிய ஷோருமின் அழகையும் நேர்த்தியையும் கண்டு ரசியுங்கள், சிறப்புச்சலுகைகளையும் அனுபவித்து மகிழுங்கள்.

# கள்ளக்குறிச்சி விவகாரம்: கவர்னரிடம் அண்ணாமலை புகார்



சென்னை, 24 ஜூன் 2024: கள்ளக்குறிச்சி கள்ளச்சாராயம் விவகாரம் தொடர்பாக தமிழக கவர்னர் ஆர்.என். ரவியை நேரில் சந்தித்து தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை புகார் மனு அளித்தார்.

கள்ளக்குறிச்சி கருணாபுரம் பகுதியில் ஜூன் 18ம் தேதி கள்ளச்சாராயம் குடித்த நூற்றுக்கும் மேற்பட்டோர் வாந்தி, மயக்கம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் 59 பேர் இதுவரை சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் மருத்துவமனைகளில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இந்த வழக்கை சிபிசிஐடி காவல்துறையினருக்கு மாற்றி தமிழக அரசு உத்தரவிட்டுள்ள நிலையில், கள்ளச்சாராயம் விற்பனை செய்தவர்களையும் கைது செய்துள்ளனர். ஓய்வுபெற்ற ஐகோர்ட் நீதிபதி கோகுல்தாஸ் தலைமையில் ஒருநபர் ஆணையம் அமைக்கப்பட்டு, அவர் விசாரணை நடத்தி வருகிறார். கள்ளச்சாராயம் விற்பனையை தடுக்க தவறிய தி.மு.க. அரசை கண்டித்து, பா.ஜ.க.வினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த நிலையில் இன்று சென்னை கிண்டி கவர்னர் மாளிகையில் தமிழிசை சவுந்திரராஜன் உள்ளிட்ட பா.ஜ.க. மூத்த நிர்வாகிகளுடன் கவர்னரை தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை சந்தித்து பேசினார்.

அப்போது விஷசாராய மரணம் குறித்து கள்ளக்குறிச்சிக்கு நேரில் சென்று பார்வையிட்டது குறித்து கவர்னரிடம் தெரிவித்தனர். இந்த சம்பவத்தில் தி.மு.க.விற்கு உள்ள தொடர்பு குறித்தும் கவர்னரிடம் அறிக்கையாக சமர்பித்தனர்.

மேலும் கவர்னர் ஆர்.என்.ரவியிடம் கள்ளச்சாராயம் சம்பவம் தொடர்பான வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். தி.மு.க. அரசு கள்ளச்சாராயம் விற்பனையை தடுக்க நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என கவர்னரிடம் புகார் மனு அளித்துள்ளார்.

இந்த சந்திப்பிக்கு பின்னர் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில், தமிழகம் முழுவதும் கடந்த 3 ஆண்டுகளில் பெருகியிருக்கும் கஞ்சா, கள்ளச்சாராயம் உள்ளிட்ட போதைப்பொருள்கள் புழக்கத்தை, தி.மு.க. அரசு கண்டும் காணாமல் இருப்பது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. தி.மு.க. அரசின் இந்த அஜாக்கிரதையால் கள்ளக்குறிச்சியில் 60 உயிர்களை கள்ளச்சாராயத்துக்குப் பறி கொடுத்துள்ளோம். இதன் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்பது குறித்து சி.பி.ஐ. விசாரணை கோரி, இன்று தமிழக பாஜக மூத்த தலைவர்களுடன் இணைந்து, கவர்னர் ஆர்.என்.ரவியை சந்தித்தோம்.

மேலும், இத்தனை உயிர்கள் பலியான பின்னரும், இதற்குப் பொறுப்பான மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைதுறையின் அமைச்சர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இருப்பதும், பொதுமக்களிடையே பல கேள்விகளை எழுப்பியிருக்கிறது. உடனடியாக, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சரைப் பதவி நீக்கம் செய்ய முதலமைச்சரை வலியுறுத்த வேண்டும் என்றும் கவர்னரை கேட்டுக்கொண்டோம். இவ்வாறு அவர் கூறினார்.

# வெபர் ஷாண்ட்விக் 'தேர்தல் விவகாரம்: இந்தியா அறிக்கையை' வெளியிட்டார்

## செய்தி நுகர்வு மற்றும் தேர்தல் உணர்வுகளில் பாலினம் மற்றும் தலைமுறை வேறுபாடுகள்ன

சென்னை, 24 ஜூன் 2024: வெபர் ஷாண்ட்விக் இந்தியா, இன்று "தேர்தல் விஷயம்: இந்திய அறிக்கை"யை அறிமுகப்படுத்தியது. இது கார்ப்பரேட் அட்வைசரி மற்றும் பொது விவகார நடைமுறையின் தலைமையிலான கணக்கெடுப்பு, இந்தியாவில் உள்ள ஜெனரல் செட் (18-24 ஆண்டுகள்) மற்றும் மில்லினியல் (25-44) நுகர்வோர் மத்தியில் செய்தி நுகர்வு பழக்கவழக்கங்கள், பல்வேறு தகவல் ஆதாரங்களில் நம்பிக்கை மற்றும் வாக்களிக்கும் நடத்தைகள் மற்றும் உந்துதல்களைச் சுற்றியுள்ள தேர்தல் உணர்வுகளை இது ஆய்வு செய்தது.

முக்கிய கண்டுபிடிப்புகள்

ஊடக நுகர்வு நடத்தை டபிள்யூ.ஆர்.டி. தற்போதைய நிகழ்வுகள், செய்திகள் மற்றும் அரசியல்

செய்தி நுகர்வில் தலைமுறை வேறுபாடுகள்: மில்லினியல்ஸ் மற்றும் ஜென் செட் எஸ் இடையே செய்தி ஈடுபாட்டில் முற்றிலும் மாறுபாடு உள்ளது. 55% க்கும் அதிகமான மில்லினியல்கள் தினசரி செய்திகளைப் பின்தொடர்கின்றன, 36% ஜெனரல் செட் உடன் ஒப்பிடும்போது, தற்போதைய நிகழ்வுகள், செய்திகள் மற்றும் அரசியலில் ஆண்கள் கணிசமாக அதிக நாட்டம் கொண்டுள்ளனர். முதல் 3 செய்தி ஆதாரங்களில் டிவி இருந்தாலும், மில்லினியல்ஸ் (60%) உடன் ஒப்பிடும்போது ஜென் செட் எஸ் (44%) மத்தியில் கணிசமான அளவு குறைந்த விருப்பமாக இருந்தது.

டிஜிட்டல் நுகர்வு அதிகரிப்பின் மறுஉறுதிப்படுத்தல்: டிஜிட்டல் மீடியா ஏற்றத்திற்கு ஏற்ப, தற்போதைய நிகழ்வுகள், செய்திகள் மற்றும் அரசியல் நுகர்வுக்கான முன்னணி தளமாக யூடியூப் உள்ளது. சென்னை மற்றும் பெங்களூரில் டிவி சேனல்கள் முன்னணியில் இருந்த அதே வேளையில், குறிப்பாக டெல்லியால் இயக்கப்படும் அனைத்து மக்கள்தொகை அமைப்புகளிலும் இது ஆதிக்கம் செலுத்தும் தகவல் ஆதாரமாக இருந்தது. அதை இன்ஸ்டாகிராம், டிவி மற்றும் வாட்ஸ்அப் ஆகியவை நெருக்கமாகப் பின்பற்றின.

அதிகம் பார்க்கப்பட்டவை மிகவும் நம்பகமானவை அல்ல: கூகுள் தேடல், அச்சு ஊடகம் மற்றும் டிஜிட்டல் செய்தி ஊடகம் ஆகியவை பெரும்பாலான சமூக ஊடக தளங்களுடன் ஒப்பிடும்போது அதிக நம்பகத்தன்மையைக் கொண்டுள்ளன.

மரபுவழி ஊடகங்கள் மில்லினியல்களுக்கு வலுவாக எதிரொலிக்கின்றன: அச்சு ஊடகங்கள் மில்லினியல்கள் மத்தியில் தொடர்ந்து அதிக வரவேற்பைப் பெற்றன. 31% ஜெனரல் இசட்களுடன் ஒப்பிடும்போது 45% மில்லினியல்கள் செய்தி மற்றும் அரசியலுக்காக அச்சு ஊடகத்தை உட்கொண்டனர். இந்த விருப்ப முறை தொலைக்காட்சிக்கான நுகர்வு முறையிலும் தெளிவாகத் தெரிந்தது. தென்னிந்தியாவில் குறிப்பாக சென்னை மற்றும் பெங்களூர் ஆகியவை இந்தியாவின் மற்ற பகுதிகளை விட தொலைக்காட்சி மீது வலுவான சாய்வைக் கொண்டிருந்தன. மேலும், 33% பெண்களுக்கு எதிராக 42% ஆண்கள் அச்சிட விரும்பினர். பெரும்பாலான சமூக ஊடக தளங்களுடன் ஒப்பிடும் போது அச்சு ஊடகங்களும் அதிக நம்பிக்கையுடன் இருந்தன.

தவறான தகவல்களைப் பற்றிய கவலைகள்: போலிச் செய்தி இணையதளங்களுக்குப் பிறகு, தவறான தகவல்களைப் பரப்புவதில் சமூக ஊடகங்களில் செல்வாக்கு செலுத்துபவர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளனர். குறிப்பாக ஆண்களுக்கு அவர்கள் மீது அவநம்பிக்கை இருந்தது.

தேர்தல்கள் மற்றும் வாக்களிப்பு குறித்த உணர்வுகள்

ஊக்கமளிக்கும் மில்லினியல்கள் மற்றும் குறைவான உற்சாகமான ஜெனரல் இசட்: குடிமைக் கடமையின் வலுவான உணர்வு மற்றும் கல்வி சீர்திருத்தத்திற்கான விருப்பம் காரணமாக மில்லினியல்கள் தேர்தல்கள் மற்றும் வாக்களிப்பதன் மூலம் கணிசமாக உந்துதல் பெற்றன. சென்னை மற்றும் ஹைதராபாத் தேர்தல்களை ஒப்பிடும் போது அதிக உணர்வைக் கொண்டிருந்தன. இதற்கு நேர்மாறாக, ஜெனரல் இசட் குறைந்த உற்சாகத்தைக் காட்டினார், அரசியல் ஈடுபாட்டில் அக்கறையின்மை இருக்கக்கூடும் என்பதைக் இது குறிக்கிறது..

தேர்தலுக்கான முன்னுரிமைப் பிரச்சினைகள் மற்றும் புதிய அரசாங்க எதிர்பார்ப்புகள்: குடிமை மற்றும் சமூகக் காரணிகளான உள்கட்டமைப்பு மேம்பாடு, பொருளாதாரக் கவலைகள் மற்றும் கட்சி அறிக்கை வாக்குறுதிகள் ஆகியவை பாலினம் மற்றும் தலைமுறைக் கூட்டங்களில் முதன்மையான வாக்களிப்பு உந்துதலாக உள்ளன. பொருளாதாரம் மற்றும் கல்வியின் நிலை தற்போதைய தேர்தல்கள் மற்றும் எதிர்கால அரசாங்கத்தின் கவனம் ஆகிய இரண்டிற்கும் மிகவும் அழுத்தமான பிரச்சினைகளாக இருந்தன, இது சமூக-பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சி பற்றிய பரவலான கவலைகளை பிரதிபலிக்கிறது. இந்த மாற்றம் வாக்கெடுப்புக்கு எதிர்காலம் சார்ந்த அணுகுமுறையை பரிந்துரைத்தது, வாக்காளர்கள் சிறந்த எதிர்காலத்திற்காக மேக்ரோ-லெவல் மாற்றங்களை நாடுகின்றனர்.

வாக்களிக்கும் உந்துதல்களில் பிராந்திய வேறுபாடுகள்: டெல்லியில் உள்ள வாக்காளர்கள் உள்கட்டமைப்பு மேம்பாட்டில் கவனம் செலுத்தினர், அதே சமயம் சென்னை மற்றும் பெங்களூரு போன்ற தென் பிராந்தியங்களில் உள்ளவர்கள், மாற்றத்தையும் தாக்கத்தை ஏற்படுத்தும் தலைமையையும் கொண்டு வருவோம் என்று வாக்குறுதி அளித்த வேட்பாளர்களுக்கு வாக்களிக்க முன்னுரிமை அளித்தனர்.

தேர்தலை நோக்கிய பாலினம் சார்ந்த அக்கறைகள்: பொருளாதாரம், கல்வி மற்றும் பொதுப் பாதுகாப்பு ஆகியவை சமீபத்திய தேர்தல்களில் முதன்மையானதாகக் கருதப்பட்டாலும், பாலினம் சார்ந்த கொள்கை நிகழ்ச்சி நிரல்களின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டி, பெண்கள் அதிகாரமளிக்கும் விஷயங்களில் பெண்கள் குறிப்பாக ஆர்வம் காட்டினர். மேலும், 55% க்கும் அதிகமானோர் புதிய அரசாங்கம் பொருளாதாரம், கல்வி மற்றும் சுகாதார நிகழ்ச்சி நிரல்களில் கவனம் செலுத்த விரும்புகின்றனர்.

நுகர்வோர் கணக்கெடுப்பு கண்டுபிடிப்புகள் குறித்து கருத்து தெரிவித்த வெபர் ஷாண்ட்விக் இந்தியாவின் பொது விவகாரங்களுக்கான எம்.டி - ஆலோசகர் மற்றும் தலைவர் ரோஹன் காஞ்சன், "இந்த அறிக்கை இன்றைய டிஜிட்டல் யுகத்தில் செய்தி நுகர்வு மற்றும் தேர்தல் ஈடுபாட்டின் மாறும் தன்மையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. பரந்த தலைமுறை போக்குகள் அறியப்பட்டாலும், கூட்டாளிகளுக்குள் இருக்கும் நுணுக்கங்கள் முறையிலிருந்து ஒரு முறிவை வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக, நுகர்வோர் உந்துதல்களில் செல்வாக்கு செலுத்துபவர்களின் இணைப்பு, பார்வையின் மீதான நம்பிக்கைக்கு எதிராக, கார்ப்பரேட் நற்பெயரைப் பகுப்பாய்வு செய்வதிலும் எதிர்கால உத்திகளின் வளர்ச்சியிலும் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும். நமது தேசிய பொதுத்தன்மைகள் நமது பிராந்திய ஏற்றத்தாழ்வுகளுடன் இணைக்கப்பட்டுள்ளன, தேர்தல்கள் விஷயம் போன்ற எந்தவொரு நுகர்வோர் ஆய்வுக்கும் ஒரு சுவாரஸ்யமான லென்ஸை தொடர்ந்து வழங்குகின்றன. மும்பை, டெல்லி-என்.சி.ஆர், சென்னை, கொல்கத்தா, பெங்களூர், ஹைதராபாத், புனே, லக்னோ, ஜெய்ப்பூர் மற்றும் அகமதாபாத் உள்ளிட்ட இந்தியாவின் முதல் 10 நகரங்களில் இருந்து 1,000 பதிலளித்தவர்களிடையே யூகொவ் இந்த ஆய்வை நடத்தியது. கணக்கெடுப்பின் புள்ளிவிவரங்கள் சமநிலையில் இருந்தன, ஆண்களுக்கு (51%) மற்றும் பெண்களுக்கு (49%) இடையே சமமான பிளவு இருந்தது, மேலும் ஜென் செட் எஸ் மற்றும் மில்லினியல்ஸ் இடையே சமமாக இது விநியோகிக்கப்பட்டது.

# இபிக்ஸ் இன்க் நிறுவனத்தை கையகப்படுத்துவதற்கான விகாஸ் லைஃப் கேர் உட்பட கூட்டமைப்பின் திட்ட ஆதரவு ஒப்பந்தத்திற்கு இபிக்ஸ் - ன் சுதந்திரமான இயக்குனர்களின் ஒப்புதல்

சென்னை, 24 ஜூன் 2024: இபிக்ஸ் இன்க் ("இபிக்ஸ்") - ன் 100 சதவிகித பங்கினை வாங்குவதற்காக விகாஸ் லைஃப்கேர் லிமிடெட் உட்பட, கூட்டமைப்பால் சமர்ப்பிக்கப்பட்ட திட்ட ஆதரவு ஒப்பந்தமானது, இபிக்ஸ் இன்க் நிறுவனத்தின் சுதந்திரமான இயக்குனர்களது ஒப்புதலை பெற்றிருப்பதாக விகாஸ் லைஃப் கேர் லிமிடெட் (வி எல் எல்) அறிவித்திருக்கிறது. இந்த கூட்டமைப்பானது, எராயா லைஃப் ஸ்பேசஸ் லிமிடெட் - ன் தலைமையின் கீழ் செயல்படுகிறது. இந்த ஸ்டாக்கிங் ஹார்ஸ் திட்ட ஆதரவு ஒப்பந்தத்தின் படி, இந்த செயல்முறையை முன்னெடுத்துச் செல்ல தேவைப்படுகிறவாறு 5 % ரொக்க டெபாசிட்டையும் இந்த கூட்டமைப்பு செலுத்தியிருக்கிறது. அத்தியாயம் 11-ன் விதிமுறைகளின் கீழ் இபிக்ஸ். இன்க் நிறுவனத்தின் முக்கிய பங்குதாரர்களுக்கும் மற்றும் ஏலதாரர்களுக்குமிடையே பேச்சுவார்த்தையின் மூலம் முடிவு செய்யப்படும். சீரமைப்பு திட்டத்தின் வழியாக இந்நிறுவனத்தின் கையகப்படுத்தல் செயல்பாட்டிற்கு வரும். யுஎஸ்ஏ - ன் நிதி நொடிப்பு / திவால் சட்டத்தின் விதிகளின்படி, திவால் நீதிமன்றத்தின் ஒப்புதலுக்கு இத்திட்டம் உட்பட்டதாக இருக்கும். இந்த ஸ்டாக்கிங் ஹார்ஸ் திட்ட ஸ்பான்சர் ஒப்பந்தமானது, இபிக்ஸ் இன்க் தலைமை செயல் அலுவலர் தலைமையிலான முதுநிலை நிர்வாக உயரதிகாரிகளின் ஆதரவை பெற்றிருக்கிறது. ஸ்பான்சர் செய்யப்பட்ட இத்திட்டத்தின் வழியாக, அத்தியாயம் 11-லிருந்து இபிக்ஸ் இன்க் மற்றும் அதனோடு இணைந்திருக்கின்ற கடன்தாரர்களை வெளியில் கொண்டு வருவதற்கு இபிக்ஸ் இன்க் - ன் பிரதிநிதிகளோடு இந்த கூட்டமைப்பு ஒத்துழைப்பு உணர்வோடு செயலாற்றும். இபிக்ஸ் இன்க் நிறுவனத்தின் 100% பங்கினை இந்த கூட்டமைப்பு வாங்குவதற்கு இந்த உத்தேச திட்டம் வகை செய்கிறது. ஸ்டாக்கிங் ஹார்ஸ் திட்ட ஆதரவு ஒப்பந்தத்தின்படி இக்கூட்டமைப்பால் வேறு விதமாக ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தால் தவிர, இபிக்ஸ் - ன் உலகளாவிய துணை நிறுவனங்களது சொத்துகள் மற்றும் கடன் பொறுப்புகள் இந்த கையகப்படுத்தலில் உள்ளடங்கும் (வட அமெரிக்க நிறுவனத்தின் கடன் பொறுப்புகள் தவிர்த்து). இபிக்ஸ் இன்க் என்பது, காப்பீடு, நிதி மற்றும் சுகாதார பராமரிப்பு துறையைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு ஆன்-டிமாண்ட் மென்பொருள் மற்றும் ஈ-காமர்ஸ் சேவைகளை வழங்கும் ஒரு முன்னணி பன்னாட்டு நிறுவனமாகும். சப்ளையர், இபிக்ஸ் இன்க்., (நாஸ்டாக்: இபிஐஎக்ஸ்) உட்கட்டமைப்பு எக்ஸ்சேஞ்சுகள், கேரியர் அமைப்புகள், ஏஜென்சி அமைப்புகள் மற்றும் இடருக்கான இணக்கநிலை தீர்வுகளிலிருந்து, காப்பீட்டுத் துறையில் இயங்கி வரும் அனைத்து நிறுவனங்களுக்கும் தனிப்பயனாக்கப்பட்ட மென்பொருள் மேம்பாடு வரை விரிவான தீர்வுகளை வழங்கி வருகிறது. ஐ எஸ் ஓ 9001:2015 சான்றிதழ் பெற்ற நிறுவனமான விகாஸ் லைஃப்கேர் லிமிடெட் (வி எல் எல்), பாலிமர் மற்றும் ரப்பர் காம்பவுண்ட்டுகளின் தயாரிப்பு மற்றும் விற்பனையிலும் மற்றும் பிளாஸ்டிக்குகள், செயற்கை மற்றும் இயற்கை ரப்பர்களுக்கான ஸ்பெஷாலிட்டி அடிடிவ்ஸ் வர்த்தகத்திலும் இதுவரை வழக்கமாக ஈடுபட்டு வந்திருக்கிறது. இ வி ஏ, பி வி சி, பிபி, பி இ போன்ற நுகர்வோர்களாலும், தொழிற்சாலைகளாலும் கழித்துக் கட்டப்படும் கழிவுப் பொருட்களிலிருந்து மறுசுழற்சி செய்யப்படும் காம்பவுண்ட்டுகளை தயாரித்து வரும் இந்நிறுவனம், இந்திய அரசின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முன்னெடுப்புகளுக்கு ஆர்வத்தோடு தீவிர பங்களிப்பை வழங்கி வருகிறது. பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் பேக்கேஜிங் பொருட்களை ஆயிரக்கணக்கான டன்களில் பயன்படுத்துகின்ற பெருநிறுவனங்களின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்து அது தொடர்பான கடப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு விகாஸ் லைஃப்கேர் பெரிதும் உதவி வருகிறது.




# இந்தியாவெங்கிலும் மரம் வளர்ப்பு திட்டத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் என்விஷன் எனர்ஜி



திருச்சிராப்பள்ளி, 24 ஜூன் 2024: தூய்மை தொழில்நுட்ப (க்ளீன்டெக்) உலகளாவிய செயல்பாடுகளைக் கொண்ட ஒரு நிறுவனமான என்விஷன் எனர்ஜி இந்தியா, 7000 மரக்கன்றுகளை நட்டு பராமரிக்கும் முன்னெடுப்பின் வழியாக, இந்தியா முழுவதும் மரம் வளர்ப்பதற்கான ஒரு பெரிய (சி எஸ் ஆர்) ஒரு கார்ப்பரேட் சமூக பொறுப்புறுதி திட்டம் மேற்கொள்ளப்படுவதை அறிவித்திருக்கிறது. நாம் வாழும் பூமியை தூய்மையான கிரகமாக பாதுகாக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்படும் என்விஷன் எனர்ஜி, இதற்காக EARTHDAY.ORG என்ற அமைப்புடன் கூட்டாண்மையாக இணைந்து செயல்படுகிறது. கடந்த 50 ஆண்டுகளுக்கும் அதிகமாக 190 நாடுகளில் EARTHDAY.ORG என்ற அமைப்பு முனைப்புடன் இயங்கி வருகிறது. தமிழ்நாடு, குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிரா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மரக்கன்றுகளை நட்டு பராமரிக்கும் இத்திட்டத்தை என்விஷன் எனர்ஜி இந்தியா எஃப் ஒய்2024 இல் செயல்படுத்தும். திருச்சிராப்பள்ளியில் அமைந்துள்ள காற்றாலைகளுக்கான இறக்கைகள் (பிளேடு) உற்பத்தி ஆலையில் தமிழக அரசின் முதுநிலை அதிகாரிகள் முன்னிலையில் இந்த மரக்கன்று நடும் முன்னெடுப்பு திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மாவட்ட வன அலுவலர் திரு. கணேசலிங்கம், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திரு. செல்வகுமார், துணைக் காவல் கண்காணிப்பாளர் திரு. முத்துராஜா, விராலிமலை சிறப்பு கோட்டாட்சியர் திரு. சக்தி சரவண குமார், விராலிமலை கோட்டாட்சியர் திரு. கருப்பையா ஆகியோருடன் என்விஷன் எனர்ஜி இந்தியா நிறுவனத்தின் தலைமைத்துவ குழுவின் முதுநிலை அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்நிறுவனத்தின் தற்போதைய ஆர்டர் புத்தகத்தின்படி 1மெகாவாட்-க்கு 1 மரக்கன்று என்ற அடிப்படையில் 7000 மரக்கன்றுகள் நடப்படுகின்றன. வணிகம் அதிகரிக்கும்போது நடப்படும் மரக்கன்றுகளின் எண்ணிக்கையும் உயரும். எர்த்டே நெட்வொர்க்குடன் அமைப்புடன் இணைந்து திருச்சிராப்பள்ளி இறக்கைகள் (பிளேடு) உற்பத்தி ஆலையில் கொய்யா, மா, சப்போட்டா மற்றும் பலா உள்ளிட்ட 650 பழம் தரும் மரக்கன்றுகள் வெள்ளிக்கிழமையன்று நடப்பட்டன. கொய்யா மரங்கள் பல்வேறு மண் மற்றும் தட்பவெப்ப நிலைகளிலும் சிறப்பாக வளர்ந்து பயனளிக்கக்கூடியவை. மாமரங்கள் தமிழ்நாட்டின் கலாச்சாரத்தோடு முக்கிய தொடர்பு கொண்டவை மற்றும் வறட்சியைத் தாங்கி வளரும் தன்மை கொண்டவை; திருச்சியின் வறண்ட பருவநிலைக்கு மாமரங்கள் பொருத்தமானவை. சப்போட்டா மரங்கள் மண்ணின் தரத்தை மேம்படுத்தி அரிப்பைத் தடுக்கும் திறன் கொண்டவை; பலா மரங்கள் திருச்சியின் வெப்பமான, ஈரப்பதமான பருவநிலையிலும் செழித்து வளரக்கூடியவை; மற்றும் பூச்சிகள் மற்றும் நோய்களை எதிர்க்கும் திறன் கொண்டவை.

இந்நிகழ்ச்சியில் பேசிய என்விஷன் விண்ட் பவர் டெக்னாலஜிஸ் இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஆர் பி வி பிரசாத் கூறியதாவது: "சமூக பொறுப்பு வாய்ந்த க்ளீன்டெக் நிறுவனமாக இயங்கி வரும் என்விஷன், எர்த்டே நெட்வொர்க் இந்தியா அமைப்பின் கூட்டாண்மையோடு மரக்கன்றுகளை நட்டு வளர்க்கும் இந்த முக்கியமான திட்டம் தொடங்கப்படுவதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும், புவி வெப்பமடைதலை எதிர்த்துப் போராடுவதற்கும் என்விஷன் உறுதிபூண்டுள்ளது. சுற்றுச்சூழலுக்கு ஆதரவான மரக்கன்றுகளை நடும் இந்த மகத்தான திட்டமானது எமது பெருநிறுவன சமூக பொறுப்புறுதி செயல்பாடுகளும் ஒரு அங்கமாக இனியும் தொடர்ந்து நடைபெறும். நிலைப்புத்தன்மையுள்ள நடைமுறைகள் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான எங்கள் அர்ப்பணிப்பை வலுப்படுத்தும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

# நெஸ்லே இந்தியா "உதா மன்ச், டிகா கிரன்ச்" விளம்பரப் பிரச்சாரத்தை வெளியிட்டுள்ளது




சென்னை, 24 ஜூன் 2024: விமர்சனங்கள் மற்றும் சந்தேகங்கள் சில சமயங்களில் படைப்பாற்றல் மற்றும் லட்சியத்தை மட்டுப்படுத்தும் தற்காலத்து உலகில், நெஸ்லே மன்ச் அதன் "உதா மன்ச், டிகா கிரன்ச்" விளம்பரப் பிரச்சாரத்தை வெளியிட்டது, தனிநபர்கள் அவர்களின் தனித்துவமான குணங்களைத் தழுவி, நம்பிக்கையுடன் தங்கள் ஆர்வங்களைத் தொடர்வதை இது ஊக்குவிக்கிறது. மன்ச்-ன் ஒவ்வொரு கடியும் "கிரஞ்சை" கொண்டாடுகிறது, இது ஒவ்வொரு நபருக்கும் உள்ள உள் வலிமை மற்றும் தாங்குதிறனைக் குறிக்கிறது, அவர்களுக்கு உண்மையாக இருந்து அவர்களின் கனவுகளைப் பின்தொடர்வதன் மூலம் கிடைக்கும் மகிழ்ச்சியான வெகுமதிகளை அவர்களுக்கு நினைவூட்டுகிறது.

இந்த பிரச்சாரம் குறித்து நெஸ்லே இந்தியாவின் கன்ஃபெக்ஷனரி வணிக இயக்குநர் திரு.ரூபாலி ரத்தன் அவர்கள், இந்த விளம்பரப் பிரச்சாரத்தின் மூலம், சந்தேகம் உள்ளவர்களிடமிருந்து வரும் சத்தம் அனைத்தையும் நசுக்குவதில் ஒரு கூட்டாளியாக இருக்கவும், உங்கள் உண்மையான சுயமாக இருப்பதை யாரும் தடுக்காமல் பார்த்துக்கொள்ளவும் நாங்கள் விரும்புகிறோம். மன்ச்-ன் கிரன்ஞ்ச் ஒரு வலிமைமிக்க சக்தியாக வெளிப்படும் என்று நாங்கள் நம்புகிறோம், இன்றைய பதின்மவயதினர் கூச்சல்களுக்கு அப்பால் எழுந்து அனைத்து முரண்பாடுகளுக்கும் எதிராக வெற்றிபெற தைரியம் அளிக்கும்" என்று கூறினார்.

நார்த் வி எம் எல் நிர்வாக பங்குதாரர் ஜெய்பீர் அகமது, "இளம் மற்றும் துடிப்பான இந்திய நகரங்களில் அமைக்கப்பட்ட தொடர்புடைய கதைகள் மற்றும் தடையற்ற கதைசொல்லல் மூலம், மன்ச்-ன் கிரன்ஞ்ச் ஆனது பதின்வயதினர் தங்கள் தனித்துவத்தைத் தழுவி, அசைக்க முடியாத வெற்றி மனப்பான்மையுடன் முன்னேறிச் செல்வதற்கு எப்படி ஒரு உந்துசக்தியாக இருக்கிறது என்பதை நாங்கள் வெளிப்படுத்தியுள்ளோம்" என்று கூறினார். இந்த விளம்பரப் பிரச்சாரத்தில் வட மற்றும் தென்னிந்தியா முழுவதும் வெளியிடப்பட்ட டிஜிட்டல் விளம்பரப்படங்களின் தொடரும்அடங்கும்.